
வரப்புத் தகராறு



சென்னை கல்வித்துறை
வெளியீடு.

வரப்புத் தகராறு.

[முதியோர் கல்வி—சுவடி 4.]

ச. சந்திரமௌலீஸ்வரன்.

சென்னை கல்வித்துறை வெளியீடு.

முதல் பதிப்பு—செப்டம்பர், 1956.

கபீர் அச்சுக்கூடம், சென்னை. (3314)

முன்னுரை

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப் போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப் பயன் பெறவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6–9–1956.

நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

இதில் உள்ளவை.

வரப்புத் தகராறு.

கோவிலூர் ஒரு சிறு கிராமம். அதில் முனியப்பன், கந்தசாமி என்பவர் இரு விவசாயிகள். இருவருக்கும் சிறிது நிலம் உண்டு. அந்த நிலங்கள் அடுத்தாற்போல் சேர்ந்து இருந்தன. அவர்கள் நிலங்களுக்கு நடுவில் ஒரே ஒரு வரப்புத்தான் உண்டு. முனியப்பனுக்கும்,

கந்தசாமிக்கும் அடிக்கடி நில சம்மந்தமாக தகராறுகள் ஏற்படும். அதனுல் அவர்கள் எப்பொழுதுமே விரோதிகள்.

ஒரு நாள் முனியப்பன், தன் ஆட்களை ஏவி விட்டான். வரப்பை வெட்டி, கந்தசாமியின் நிலத்திற்குள் போடச் செய்தான். அதனுல் கந்தசாமியின் நிலத்தில் கால் பாகத்தை தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டான். மறுநாள் கந்தசாமியின் ஆட்கள் வந்தார்கள். அதே வரப்பை வெட்டிப்

போட்டார்கள். முனியப்பன் நிலத்தில் சரிபாதியை கந்தசாமியின் நிலத்தோடு சேர்த்தனர். இந்த சிறிய வரப்புத் தகராறு பெரிது ஆயிற்று. முனியப்பனும் கந்தசாமியும் பகை கொண்டனர். நிலத்தில் கைகலப்பு ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் ஒழித்துக்கட்ட சபதம் செய்தனர். இவர்கள் தகராறை ஊர்ப் பெரிய மனிதர்களின் முடிவுக்குக் கொண்டு போகவில்லை. முனியப்பன் மிகவும் ஆத்திரம்



நிலத்தில் கைகலப்பு ஏற்பட்டது.

அடைந்தான். கோர்ட்டுக்குப் போய், கந்தசாமி மீது வழக்குப் போட துணிந்தான்.

2. சுரண்டும் சாமிநாத பிள்ளை.

அந்தக் கிராமத்தில் சாமிநாத பிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஊர் வம்பு வழக்குகளில் தானே போய் தலையிடுவதே வழக்கம். சிறு தகராறுகளை எல்லாம் கோர்ட்டுக்குக் கொண்டு போக தூண்டுவார். கோர்ட்டு விவகாரங்களை நன்ருக அறிந்தவர். இதன் மூலமாக

பிறரிடம் பணத்தை நன்கு சுரண்டுவார்.

3. கந்தசாமி மீது வழக்கு.

முனியப்பன் கந்தசாமி மீது வழக்குப் போட சாமிநாத பிள்ளையின் உதவியை நாடினன். பிள்ளையும் இந்த நல்ல சமயத்தைத்தான் எதிர்பார்த்து இருந்தார். முனியப்பனுடைய வழக்கை கோர்ட்டில் தாக்கல் செய்யலாம், என்று அவனுக்கு யோசனை கூறினர். வக்கீல் வைக்கச் சொன்னர். கோர்ட்டு

செலவுகளுக்கு அவனை ஐந்நூறு ரூபாய் கொண்டுவரச் சொன்னார். பாவம்! ஏழை விவசாயி முனியப்பன் கையில் என்ன ரொக்கப் பணமா வைத்திருப்பான்? நேரே வீட்டிற்குப் போனான். தன் மனைவியிடம் செய்தியைச் சொன்னான். அவள் வழக்குப் போடவேண்டாம் என்று தடுத்தாள். ஊர்ப் பெரிய மனிதர்களை வைத்துக்கொண்டு தகராறை தீர்க்கலாம் என்று நல்ல புத்திமதி சொன்னாள். முனியப்பன் மிகவும் ஆத்திரம்

அடைந்தான். மனைவியை கண்டபடி திட்டினான். கந்தசாமி மீது கோர்ட்டில் வழக்குப் போட்டே ஆக வேண்டும் என்றான். நேரே வட்டிக் கடை வரதராசனிடம் சென்றான். தன் நிலத்தை அடகு வைத்து அவரிடம் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினான். அதைக் கொண்டுபோய் சாமிநாத பிள்ளையிடம் கொடுத்தான். கந்தசாமி மீது உடனே கோர்ட்டில் வழக்குப் போட அவரைக் கேட்டுக் கொண்டான். பிள்ளையும்

அப்படியே செய்வதாகச் சொன்னார். பிறகு மன நிம்மதியோடு முனியப்பன் வீடு திரும்பினான். தன் மனைவியிடம் இந்த செய்தியைச் சொல்லவேயில்லை. சாமிநாத பிள்ளை முனியப்பன் பணத்தில் முக்கால் பாகத்தை தானே ஏப்பம் விட்டார். ஏதோ ஒரு சின்ன வக்கீலைப் பிடித்து, முனியப்பன் வழக்கை கோர்ட்டில் தாக்கல் செய்தார்.

4. முனியப்பன்மீது எதிர் வழக்கு.


கந்தசாமிக்கு கோர்ட்டில் இருந்து 'சம்மன்' வந்தது. அவன் முனியப்பன் மீது மிகவும் கோபம் கொண்டான். அவன் என்ன முனியப்பனுக்கு சளைத்தவனு? இல்லை. அவனுக்கு மட்டும் சாமிநாத பிள்ளையை தெரியாதா, என்ன? கந்தசாமியும் அவரிடமே போய் முனியப்பன் மீது 'எதிர் வழக்கு' கோர்ட்டில் போடவேண்டும் என்ருன். சாமிநாத பிள்ளைக்கு என்ன கசக்கவா போகிறது? நல்ல யோசனை என்று அவனை

மேலும் தூண்டிவிட்டார். தான் நின்று அவன் சார்பில் 'எதிர் வழக்கை' கோர்ட்டில் நடத்தித் தருவதாகச் சொன்னார். கோர்ட்டு செலவுகளுக்காக அவனையும் ரூபாய் ஐந்நூறு கொண்டுவந்து தன்னிடம் கொடுக்கச் சொன்னார். கந்தசாமியும் ஒப்புக் கொண்டான். அவனும் தன் நிலத்தை வட்டிக் கடை வரதராசனிடம் அடகு வைத்தான். ரூபாய் ஐந்நூறும், இரண்டு வட்டிக்கு கடன் வாங்கினான். பணம் முழுதும்

சாமிநாத பிள்ளையிடம் கொண்டுவந்து உடனே கொடுத்தான். முனியப்பன் மீது "எதிர் வழக்கு" கோர்ட்டில் அவன் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. கந்தசாமி கொடுத்துச் சென்ற பணத்திலும் சாமிநாத பிள்ளை பாதிக்குமேல் ஏப்பம் விட்டார். பாவம்! ஏழை விவசாயிகளின் பணம் இப்படி இவர் போன்ற வஞ்சகர்களால் சுரண்டப்பட்டு வீண் ஆகிறது.

5. வழக்கு விசாரணை.

கோர்ட்டில் 'வரப்புத் தகராறு' வழக்கு விசாரணை நடந்தது. முனியப்பனும், கந்தசாமியும் அவரவர் வக்கீல்களுடன் கோர்ட்டுக்கு வந்தார்கள். இரு பக்கத்து வக்கீல்களும் இவர்கள் வழக்கை காரசாரமாக் கோர்ட்டில் வாதாடினார்கள். நீதிபதி, வழக்கை தீர்ப்புக் கூருமல் சிறிது ஒத்திப் போட்டார். முனியப்பனுக்கும், கந்தசாமிக்கும் ஒரே ஏமாற்றம்! ஏன்? வழக்கு இன்னும் முடியவில்லை!



இரு பக்கத்து வக்கீல்களும் இவர்கள் வழக்கை காரசாரமாக
கோர்ட்டில் வாதாடினார்கள்.

அவர்களுடைய வக்கீல்களும் அவர்களை மேலும் பணம் கேட்டனர். வக்கீல்களுக்கு மேலும் கொடுக்க அவர்கள் பணத்திற்கு எங்கே போவார்கள்! பாவம்! முனியப்பன் தன் ஒரே ஜோடி உழவு மாடுகளை விற்றான். வக்கீலுக்கு சிறிது பணம் கொடுத்தான். கந்தசாமிக்கும் அதே கதிதான் ஏற்பட்டது. வஞ்சகன் சாமிநாத பிள்ளை செய்த சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

ஒரு மாதம் சென்றது. மறுபடியும் அவர்கள் வழக்கு விசாரணைக்கு கோர்ட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முனியப்பனும், கந்தசாமியும் கோர்ட்டில் நின்றார்கள். அவர்கள் வக்கீல்களும் மறுபடியும் இவர்கள் வழக்கை நன்றாக வாதாடினார்கள்.

6. தீர்ப்பும் விளைவும்.

நீதிபதியும் தீர்ப்புக் கூறினார். என்ன தீர்ப்பு? "இந்த வழக்கே விசித்திரமானது. விரோதம் காரணமாக

உண்டானது. 'வரப்புத் தகராறு' என்பது கிராமங்களில் சாதாரணமாக ஏற்படுவது. இதை 'கிராமப் பஞ்சாயத்து' மூலமே சுலபமாக தீர்க்க முடியும். அதிக செலவுகள் செய்து இம்மாதிரி வழக்குகளைக் கோர்ட்டுக்கு கொண்டு வர அவசியமே இல்லை. இது என் கருத்து. இந்த வழக்கில் முனியப்பன் முதலில் வரப்பை வெட்டி இருக்கிருர். இதையே கந்தசாமியும் போட்டிமேல் பிறகு செய்து இருக்கிருர். ஆகையால், இந்த வழக்கில்

இருவருக்கும் 'சமாதானம்' செய்து வைக்க உத்தரவு இடுகிறேன்,'' என்ருர்.

இத் தீர்ப்பு முனியப்பனையும், கந்தசாமியையும் ஒற்றுமைப் படுத்தியது. இப்பொழுதுதான் அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து கொண்டார்கள். பணமும், சொத்து சுதந்திரமும் போன பின்புதான் இவர்களுக்கு நல்ல புத்தி வந்தது. இவர்கள் இடையே இனிமேல் தகராறும் ஏற்படாது. ஏன்? இருவரது நிலங்களும்தான், வட்டிக் கடை வரதராசனிடம் சென்று

விட்டனவே! இப்பொழுது இருவரும் 'விவசாய கூலிகள்.' 'வரப்புத் தகராறு' இப்படி மனிதனின் நல் வாழ்வையே நாசம் செய்து விட்டது!
